முருகப்பெருமான் துணை

**மகான் பூசலார் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.08.2022, சனிக்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா
ஞானவான்களை படைத்திட
ஞானபண்டிதனார் ஆற்றலை
ஞானமாக அருளும் தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தனை
பூசலாரும் சுபகிருது நள்ளி திங்கள்
புகலுவேன் எழுநான்கு திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 28 நாள், 13.08.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் உலகமக்கள் தானும்
வல்லமை காண உரைப்பேன்
சோரம் போக்கி ஆற்றல் தரும்
சுப்பிரமண்யர் ஞானமாக வரும்
4. வருகின்ற அரங்கன் உபதேசம்
வடிவேலன் அரங்கனுள் இருந்து
தருகின்ற நல் வேதமாகும்
தரணியோர் ஏற்று தொடர்ந்து வந்து
5. வந்துமே வேலவன் வழிபாட்டை
வரமாகத் தொடர் பூசை செய்து
சிந்தைமாறா ஞானத்திருவடி
சித்தி தரும் அரங்கன் மலரடி
6. மலரடி பற்றி ஞானம் பயில
மாதரும வழிகளையும் ஏற்று
வளரும்படி உலகம் எங்கிலும்
வரம்பெற கொண்டுச் செல்ல
7. செல்லவே இவை சேவை ஆற்றி
செயல்படும் அன்பர்கட்குள்ளே
வல்லமை தந்து வடிவேலன் குடியேறி
வாசிவோட்டம் கவனித்து சகலவகை
8. வகையான சூட்சும வழியில்
வரமாக சத்சித் ஆனந்தம்
மிகையாக கிட்டும்படி அருளி
முழுமை ஞான வாழ்வும் தருவான்
9. தருகவே தருமம் செய்து
தவராசன் வழி நடப்பவர்
தரும பலமிருக்க புற பூசை இல்லை எனினும்
தண்டாயுதனை எண்ணி மானச

10. மானச அகபூசை செய்தாலே
மார்க்கமுடன் வந்தேன் என
ஞானபண்டிதன் துணை தானும்
ஞான குரு அரங்கன் வழி கிட்டி

11. கிட்டியே சித்திகள் அடைவர்
குறைவிலா ஞானிகள் ஆவர்
தட்டாது வர தரணியையே மாற்றுவர்
தாமுரைத்த அருளாசி முற்றே

–சுபம்–